உறுப்பினர் போன்றவர்கள் இன்னும் பலரைச் சேர்த்து அந்த முயற்சியிலே ஈடுபடுவதற்குக் கூட்டுறவுத் துறையிலோ அல்லது தனியார் துறையிலோ ஏற்பாடு செய்தால் அரசாங்கம் கட்டடம் கட்டுவது, பண உதவி செய்வது, இயந்திரங்கள் வாங்கிக்கொடுப்பது, மூலப்பொருட்கள் பெற்றுத் தருவது இவற்றையெல்லாம் செய்வதற்குத் தயாராக இருக்கிறது.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்பேட்டை களிலே தனியார் தொழில்களை நடத்தினாலும் நாம் மூலதனம் போட்டிருக் கிறோம், ஏராளமான பணம் போட்டு இருக்கிறோம். சிறு தொழில்கள் நெருக்கடியான கட்டத்தில் இருக்கின்றது. நம் மாநில அரசு வெளிநாடு களுக்கோ அல்லது வெளி மாநிலங்களுக்கோ தேவையான பொருட்களை எவை எவை என்று அறிந்து அந்த வகையிலே உற்பத்தி செய்வதற்கு சிறு தொழில்களை ஆரம்பிக்கக்கூடிய வகையில் தொழிலதிபர்களுக்கு ஆலோசனை கூறியிருக்கிறதா? சிறு தொழில்கள் அபிவிருத்தியடைய சர்க்கார் முயற்சி யெடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாட்டிலே சிறு தொழில்களுக்கு ஆபத்து இருப்பதாக யாரும் என்னிடத்திலே சொல்லவில்லை. புள்ளி விவரங் களைப் பார்க்கும்போது ஆண்டுதோறும் தமிழ்நாட்டிலே ஏராளமான சிறு தொழில்கள் தொடங்கப்படுகின்றன என்பதை அறிகிறோம். இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் காம்ப்ளக்ஸ் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது நம்முடைய மாநிலம் சிறப்பான முறையிலே நடைபெறுவதாக எல்லா மாநிலங் களின் அமைச்சர்களும் சொல்லியிருக்கிறார்கள். சிறு தொழில்கள் ஆரம்பிப்பதற்கு இந்த அரசாங்கம் ஊக்கம் தருகிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்கிற கருத்து உற்பத்தி செய்த பொருள்களுக்கு சந்தை தேடித்தருவது, மார்க்கெட்டிங் பெஸிலிட்டிஸ் செய்துகொடுக்கின்ற பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்வது என்பது. அப்படிச் செய்தால் சிறு தொழில்களுக்கு வாய்ப்பு இருக்கும் என்பது உண்மை. அதற்காகத்தான் சர்க்கார் ஒரு சிறு தொழில் வாரியத்தை ஏற்படுத்தித் தனியார் துறையில் சிறு தொழில்களை ஆரம்பிக்கக்கூடிய வகையில் அவர்களுக்குச் சந்தையைத் தேடிக்கொடுப் பதற்கும் மூலப்பொருட்களை வாங்கிக்கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்து கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

Working Group for Electronics Industries

* 301 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have constituted any Working Group to study the Electronics Industry in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) இம்மாநிலத்தில் குறிப்பாக சிறுதொழில் பிரிவில் மின் அணுப் பொருள்கள் உற்பத்தித் தொழில் வளர்ச்சிக்குரிய வாய்ப்புகளைக் கண்டறி வதற்காக மின் அணுப் பொருள் உற்பத்தித் தொழிலுக்கான செயற்குழு ஒன்றை அமைப்பதற்கு 1970 ஏப்ரலில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. மின்

1970 செப்டம்பர் 8]

அணுப் பொருள் உற்பத்தித் தொழில் வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய வழிவகைகளைப்பற்றி விவாதிப்பதற்காக குறித்த காலத்திற் கொருமுறை அது கூட்டங்கள் நடத்தியது. இச்செயற்குழு தனது அறிக்கையை முடிக்கும் தறுவாயில் உள்ளது. அவ்வறிக்கை விரைவில் அரசிற்கு அனுப்பப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கோயம்புத்தூரில் சிறுதொழில்கள் பொருட்காட்சி

* 302 வினா.—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை நகரத்தில் சிறு தொழில்களின் நிலையான பொருட்காட்சி ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சிறு தொழில் நிலையத்தின் சார்பாக கோவை நகரிலே பொருட்காட்சி அமைக்கப்படுமே யானால் வருகின்ற பொதுமக்கள் பொருட்காட்சியைப் பார்க்கவும், அரசாங் கத்திலே உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களை வியாபாரம் செய்வதற்கும் வசதியாக இருக்கும். எனவே, அரசாங்கம் அதைத் தொடங்குவதற்கு முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிறு தொழில்களிலே உற்பத்தியாகின்ற பொருட்கள் விற்பனையாவதற்கு வசதிசெய்யும்வண்ணம் இப்படிப்பட்ட கண்காட்சிகள் அமைக்கப்படவேண்டுமென்பதைக் கொள்கையளவிலே நம்முடைய அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. சில இடங்களிலே இதற்கான வசதிகளுக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே நாம் பரிசீலித்து எந்த இடத்திலே என்ன என்ன முறை யிலே அமைத்தால் பயனுள்ளதாக இருக்கும் என்பதைப்பற்றி முடிவு எடுக்கலாம்.

திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் ஏற்படுத்தப் பட்டிருக்கிற சிறு தொழில்களிலே என்ன என்ன பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன? அந்தத் தொழிற்சாலைகள் லாபகரமாக நடைபெறுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பெரிய கேள்வியாகப் போடுகிறார்கள். ஆயிரக்கணக்கான பேர்கள் தொழில் நடத்துகிறார்கள். யார் யார் என்ன தொழில்கள் நடத்துகிறார்கள் என்று விவரம் இல்லை. ஒவ்வொருவருடைய லாபநஷ்டம் கணக்கு நமக்கு வருவதில்லை. குறிப்பாக, தொழில்களைப்பற்றி பொதுமக்களுடைய நன்மையைக் கருதி கனம் அங்கத்தினர் அவர்கள் சொன் னால் அதை அரசாங்கம் பரிசீலிக்கலாம்.

திருப்பூரில் நொய்யலாற்றின் குறுக்கேயுள்ள அணையை உயர்த்துதல்

* 303 வினா.—**திரு. சு. துரைச்சாமி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—